# Google Duo

**Google Ireland Limited (“Google”)**
Gordon House, Barrow Street, Dublin 4, Ireland
https://support.google.com/

*டிசம்பர் 21, 2020 முதல் நடைமுறைக்கு வருகிறது*

**ஒப்பந்தச் சுருக்கம்**

- ஐரோப்பிய ஒன்றியச் சட்டத்திற்கு இணங்கும் வகையில் எங்கள் சேவை தொடர்பான சலுகையின் முக்கிய அம்சங்களை இந்த ஒப்பந்தச் சுருக்கம் விவரிக்கிறது[1].
- பல்வேறு சேவை தொடர்பான சலுகைகளுக்கு இடையேயான ஒப்பீட்டைச் செய்ய உங்களுக்கு உதவுவதே இதன் நோக்கமாகும்.
- எங்கள் சேவை தொடர்பான சலுகையைப் பற்றிய முழுமையான தகவல்கள் பிற ஆவணங்களில் உள்ளன.

**சேவைகள்**
Google Duo என்பது ஒரு வீடியோ தகவல்தொடர்பு சேவையாகும், இது இணைய இடைமுகம் அல்லது ஆப்ஸ் வழியாக பல சாதனங்களிலும் இயங்குதளங்களிலும் வழங்கப்படுகிறது. Google Duo வழியாகத் தொடர்புகொள்ள இணைய இணைப்பு தேவை. தேவையான அளவு திறனுடனும் கவனத்துடனும் Google Duoவை Google வழங்குகினாலும் சேவையின் தரம் குறைவதில்லை.

**கட்டணம்**
Google Duo சேவை இலவசமாக வழங்கப்படுகிறது. அதன் உபயோகம் Google சேவை விதிமுறைகளுக்கு உட்பட்டது (https://policies.google.com/terms தளத்தில் சேவை விதிமுறைகளைக் காணலாம்).

**கால அளவு, புதுப்பித்தல் & நிறுத்துதல்**
பதிவு செய்த உடனேயே Google Duoவை நீங்கள் பயன்படுத்தத் தொடங்கலாம். குறிப்பிட்ட கால அளவிற்கு Google Duoவைப் பயன்படுத்த வேண்டுமென்ற கட்டுப்பாடுகள் இல்லை, மேலும் இதைப் பயன்படுத்துவதை எப்போது வேண்டுமானாலும் நிறுத்திக்கொள்ளலாம்.

**மாற்றுத்திறன் கொண்ட பயனர்களுக்கான அம்சங்கள்**
Google Duoவைப் பயன்படுத்தும்போது வசனங்களை இயக்கிக்கொள்ளலாம்.மேலும் விவரங்களுக்கு https://support.google.com/duo/answer/7660538?hl=en&co=GENIE.Platform=Android தளத்தைப் பார்க்கவும்

**தொடர்புடைய பிற தகவல்கள்**
வாடிக்கையாளர் உதவி மையம்: Google Duo தொடர்பான உதவி/ஆதரவிற்கு https://support.google.com/ **தளத்தைப் பார்க்கவும்.**
புகார்கள்: உங்கள் நாட்டின் சட்டப்பூர்வத் தேவைகளுக்கு ஏற்ப, சர்ச்சைகளுக்குத் தீர்வளிக்கும் வேறொரு வழங்குநரிடம் (https://ec.europa.eu/consumers/odr/main/?event=main.adr.show2 தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள அல்லது வேறொரு வழங்குநரிடம்) நீங்கள் புகாரளிக்கலாம். கூடுதல் விவரங்களை Google சேவை விதிமுறைகளில் பார்க்கலாம்.
பாதுகாப்பைப் பாதிக்கக்கூடிய சம்பவங்கள்: பாதுகாப்பு அல்லது தனியுரிமை மீறல் நிகழ்வுகளைத் தாமதமின்றிக் கண்டறிந்து பதிலளிக்கும் வகையில் மிகுந்த கவனுத்துடன் கூடிய 24/7 பாதுகாப்பு மீறல் நிகழ்வுகள் மேலாண்மைத் திட்டத்தை Google பராமரிக்கிறது. ஆன்லைன் பாதுகாப்பை நிர்வகிப்பதில் உங்களுக்கு உதவ, Google பாதுகாப்புச் சரிபார்ப்புப் பட்டியலையும் Google வழங்குகிறது.
தனிப்பட்ட தரவு: Google Duoவில் பதிவு செய்ய, உங்கள் மொபைல் எண்ணையோ மின்னஞ்சல் முகவரியையோ (அல்லது இரண்டையுமோ) வழங்க வேண்டும். Google Duoவை நீங்கள் பயன்படுத்தும்போது Google சேகரிக்கும் தனிப்பட்ட தரவு குறித்த கூடுதல் தகவல்களை Google தனியுரிமைக் கொள்கை (https://policies.google.com/privacy தளத்தில் பார்க்கலாம்) வழங்குகிறது. Google தனியுரிமைக் கொள்கை என்பது, உங்களுக்கும் Googleளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியோ இந்தச் சுருக்கவிவரத்தின் ஒரு பகுதியோ இல்லை.

---

[1] ஆர்டிகிள் 102(3) ஆஃப் டைரக்டிவ் (EU) 2018/1972 ஆஃப் தி யூரோப்பியன் பார்லிமெண்ட் அண்ட் ஆஃப் தி கவுன்சில் ஆஃப் 11 டிசம்பர் 2018 எஸ்டாபிளிஷிங் தி யூரோப்பியன் எலக்ட்ரானிக் கம்யூனிகேஷன்ஸ் கோட் (OJ L 321, 17.12.2018, p. 36).